கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

வாக்குமூல படிவம்

**OS.No. 52/2017**

பெயர் : சுப்ரமணியன் வா.சா : 1

த/க/பெயர் : பழனிச்சாமிகவுண்டர் தேதி : 27.10.2025

வா.சாட்சி 1 – ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. கோ. ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டுபிரமாணம் வாங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:–**

1. 01.07.2016ம் தேதியன்று கடன் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். அந்த தேதியில் என்னுடைய வங்கிகணக்கில் தொகை இருந்ததா என்பதை நிரூபிக்க எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால், நான் ரொக்கமாகத்தான் கொடுத்தேன், மேலும் தொகை இருப்பது எனது வருமானவரி கணக்கிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் என்னுடைய வருமான வரி கணக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான், தேவைப்பட்டால் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

2. நான் அந்த சமயத்தில் லட்சுமிவிலாஸ் வங்கியில் வங்கியில் கணக்கு வைத்திருந்தேன். மேற்படி வங்கி கணக்குக்குரிய வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்ய இயலுமா என்றால், மேற்படி வங்கியானது DBS வங்கியுடன் இணைந்துவிட்டதால் தற்பொழுது கிடைக்குமா என்று தெரியவில்லை. மேற்படி வங்கி கணக்கை தற்போது வரை பயன்படுத்திவருகிறேன் என்றால், சரியல்ல, அந்த கணக்கை முடித்துவிட்டேன்.

3. நான் இறந்துபோன முத்துசாமிக்கு நான் கடன் கொடுத்ததாக இவ்வழக்கில் கூறியுள்ள நிலையில், முத்துசாமி வட்டி ஏதாவது எனக்கு செலுத்தினாரா என்றால், வட்டி ஏதும் செலுத்தவில்லை. நான் 01.07.2016ம் தேதியிலிருந்து முத்துசாமி இறந்துபோன தேதியான 20.02.2017ம் தேதிவரை முத்துசாமியிடம் வட்டி கேட்டு நடவடிக்கை ஏதாவது எடுத்தேனா என்றால், நான் அவரிடம் வட்டியை கேட்டுக்கொண்டுதான் இருந்தேன், அவர் ஒவ்வொரு மாதமும் கொடுப்பதாக கூறிக்கொண்டே இருந்தார். மேற்சொன்ன விவரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பு

மற்றும் பிராதுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். நான் உண்மையிலேயே கடன் கொடுத்திருந்தால் வட்டி கேட்டதற்கான விவரத்தை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிராதுவில் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் முத்சாமிக்கு கடனே கொடுக்காததால் தான் வட்டி குறித்து குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரியல்ல.

4. முத்துசாமியின் வாரிசுகளிடம் கடனை திருப்பிகேட்டதாக கூறப்படும் 23.02.2017ம் தேதியன்று என்வசம் தாவா கடனுறுதி சீட்டு இருந்தது என்றால், சரிதான், அதை அவர்களிடம் காட்டிவிட்டு அன்றைய தேதிவரை வட்டி கொடுக்கவில்லைல என்று கூறிவிட்டு தான் வந்தேன். அந்த சமயத்தில் தாவா கடனுறுதி சீட்டின் நகல் எதையும் பிரதிவாதிகளிடம் கொடுக்கவில்லை என்றால், சரிதான். அதுகுறித்து எனக்கு தெரியவில்லை என்பதால் நான் கூறவில்லை. முத்துசாமி இறந்து 3வது நாளில் அவருடைய வீட்டிற்கு நான் சென்றதாக குறிப்பிட்டிருக்கும் நிலையில், நான் சென்றபோது அவருடைய வீட்டில் யார், யார் இருந்தார்கள் என்றால் பிரதிவாதிகள் மூன்று பேர் தான் இருந்தார்கள், வேறு யாரும் இல்லை.

5. இறந்து 3 நாட்களே ஆன நிலையில், நான் முத்துசாமியின் வீட்டிற்கு சென்றிருப்பேன் என்றால், அங்கு நிறைய பேர் இருந்திருப்பார்கள் என்றால், நான் காலை வேளையில் சீக்கிரமே சென்றுவிட்டேன். பொது மனிதர்கள் யாரையும் வைத்து பிரதிவாதிகளிடம் பணத்தை திருப்பி கேட்க நான் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றால், சரிதான். நான் அனுப்பிய சட்டஅறிவிப்புக்கு பிரதிவாதிகள் அனுப்பிய பதில்அறிவிப்பில் தாவா கடனுறுதி சீட்டின் நகலை அனுப்புமாறு கோரியிருந்தார்கள் என்றால் சரிதான்.

6. நான் நகல் எடுத்து அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சரிதான். இறந்துபோன முத்துசாமி RCM ரிக் சர்வீஸ், RCM ரிக் டிரில்லர்ஸ் என்ற பெயரில் ரிக் தொழில் செய்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால், சரிதான். முத்துசாமி இறக்கும்வரை மேற்சொன்ன நிறுவனத்தை நடத்திவந்தார் என்றால், சரிதான். மேற்படி நிறுவனத்தில் பங்குதாரர்கள் யார், யாரென்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. பிரதிவாதிகள் அனுப்பிய எதிருரையில் ரிக் சர்வீஸ்க்காக கடன் பெற்றார் என்றும், யார், யார் பங்குதாரர்கள் என்றும், குறிப்பிட்டு கூறியுள்ளார்கள் என்றால், முத்துசாமி என்னிடம் கடன்பெற்றபோது ரிக்சர்வீஸ்க்காக கடன் பெற்றதாக

கூறவில்லை, தனிப்பட்ட முறையில் தான் கடன் பெற்றார்.

7. முத்துசாமியின் பங்குதாரர்களிடம் முத்துசாமி கடன் பெற்றது குறித்து கேட்கவில்லை என்றால், எனக்கு அவர்கள் யாரென்றே தெரியாது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் தாவா கடனுறுதி சீட்டிலுள்ள கையொப்பம் மற்றும் கைரேகை முத்துசாமியினுடையது அல்ல மறுத்துள்ள நிலையிலும், அதை நிரூபிக்க நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், நான் மோசடியாக தயார் செய்யவில்லை, நான் முத்துசாமியிடமிருந்து தான் கையொப்பமும், கைரேகையும் பெற்றேன்.

8. முத்துசாமி எங்களுடைய வீட்டில் வைத்து தான் கடன் பெற்றார். கடன் பெற்ற தேதியிலிருந்து எவ்வளவு நாட்கள் முன்பாக முத்துசாமி என்னிடம் கடன் கேட்டார் என்றால், 10 லிருந்து 15 நாட்களுக்கு முன்னர் கேட்டார். முத்துசாமியின் குடும்பத்தினரிடம் முத்துசாமி கடன் கேட்டது குறித்து கூறிவிட்டு, கடன் கொடுக்கிறேன் என்று கூறினேனா என்றால், கூறவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ1 கடனுறுதி சீட்டில் சாட்சிகள் என்று குறிப்பிட்டுள்ள இடத்தில் எந்தவொரு கையொப்பமும் இடம் பெறவில்லை என்றால், சரிதான். முத்துசாமி கடன் பெற்றதாக சொல்லப்படும் தேதியில் யார் இருந்தார்கள் என்றும், யார் முன்னிலையில் எழுதப்பட்டது என்றும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல, எழுதியவர் மற்றும் சாட்சியாக ஒருவர் கையொப்பம் செய்துள்ளார்.

9. எழுதியவரும், சாட்சியும் என்று குறிப்பிடப்பட்டிருப்பவர் யார் என்றால், என்னுடைய மைத்துனர் V.M. பழனிச்சாமி ஆவார். கடனுறுதி சீட்டினை எழுதியவரை யார் அழைத்து வந்தார்கள் என்றால், முத்துசாமி என்னுடைய வீட்டிற்கு கடன் பெற வந்தபோது எனது வீட்டில் எனது மைத்துனர் வந்தார், எனது மைத்துனர் முத்துசாமிக்கு பழக்கமானவர் ஆவார். கேட்டதற்கு என்னுடைய மைத்துனர் எழுதினாலே போதும் என்று முத்துசாமி கூறிவிட்டார். கடனுறுதி சீட்டு எழுதுவதற்கு சாட்சிகள் கையொப்பம் அவசியம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரிந்த வகையில் எழுதியவரும், சாட்சியும் என்று கையொப்பம் செய்திருப்பதே போதும்.

10. உண்மையாக கடன் கொடுத்திருந்தால் சாட்சிகள் கையொப்பம் பெற்றிருப்பேன் என்றாலும், கடன் கொடுக்காததால் தான் தாவா கடனுறுதி சீட்டினை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை என்றால், சரியல்ல. குடும்ப செலவிற்காக

முத்துசாமி கடன் பெற்றிருந்தால் அவருடைய குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிவித்திருப்பேன் என்றாலும், அவர் கடன் பெறாததால் தான் அவரின் குடும்பத்திற்கு தெரிவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையை மறுத்து என் தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையானது இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது.

11. மேற்படி நிராகரிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றாலும், உண்மையாக கடன் கொடுத்திருப்பேன் என்றால் மேற்படி நிராகரிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மேல்முறையீடு சென்றிருப்பேன் என்றாலும், கடன் கொடுக்காததால் தான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால், சரியல்ல. நானும் என்னுடைய மைத்துனரும்/சம்மந்தியும் சேர்ந்து வேறு ஒரு பைனான்சிற்காக தாவா கடனுறுதி சீட்டினை தயார் செய்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. நான் கடன் ஏதாவது பெற்றுள்ளேனா என்றால், முத்துசாமிக்கு கடன்கொடுத்த காலத்திற்கு முன்பே நான் வங்கியில் பெற்ற கடனை திரும்ப செலுத்திவிட்டேன். இறந்துபோன முத்துசாமிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் எனக்கு அப்போது இல்லை என்றாலும், என்னுடைய வருமானத்தை நிரூபிக்காத வகையில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. உண்மையாகவே நான் கடன் கொடுத்திருந்தால் பங்குதாரர்களிடம் சென்று முறையீடு செய்திருப்பேன் என்றாலும், முறையீடு செய்யாதாலேயே நான் கடன் கொடுக்கவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றாலும், சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2025.10.27 18:12:26 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.